28.01.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்தில் எந்த இடத்திலும் மழை பதிவாகவில்லை. பெரும்பாலான இடங்களில் வறண்ட வானிலையே நிலவியது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். பெரும்பாலான இடங்களில் வறண்ட வானிலையே நிலவும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை நேரங்களில் மூடுபனி காணப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## மாடியில் தோட்டம் அமைக்க... குறைந்த விலையில் விதை, உரங்கள் விநியோகம்



மாடித் தோட்டம் அமைப்பதற்கான விதை ரகங்கள், செடிகள், இடுபொருள்கள் ஆகியவை குறைந்த விலையில் விநியோகிக்கப்படுகிறது.

மக்கள் தொகை அதிகரிப்பு, விளைநிலை நிலங்கள் குறைதல், காய்கறி விலை உயர்வு உள்ளிட்டவற்றால் பொதுமக்களே பங்கேற்கச் செய்யும் வகையில் மாடித் தோட்டம் அமைக்க "நீங்களே செய்து பாருங்கள்' என்ற மாநகர அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த ரூ.2.50 கோடியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்து கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

## விருதுநகர் மாவட்டத்தில் மக்காச்சோளம் விளைச்சல் அதிகரிப்பு: அரசு கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை

விருதுநகர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த வடகிழக்கு பருவமழை காரணமாக மக்காளச்சோளம் பயிர் விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆனால், அரசு கொள்முதல் நிலையம் இல்லாததால் குறைந்த விலைக்கே மக்காச்சோளம் விற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 1.50 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் உள்ளன. இதில், மக்காச்சோளம் சுமார் 10,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன. அதிலும், கடந்தாண்டில் விதைப்பு நாள் முதல் தொடர்ந்து வடகிழக்கு பருவமழை பெய்தது. இதன் காரணமாக மக்காச்சோளம் நன்கு செழிப்பாக வளர்ச்சி அடைந்துள்ளன.

குறிப்பாக, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மானாவாரி, கிணற்றுப்பாசனத்தில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். அதிலும், விருதுநகர், சிவகாசி, வெம்பக்கோட்டை, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜபாளையம் ஆகிய பகுதிகளில் அதிகமாகவும், திருச்சுழி, நரிக்குடி, அருப்புக்கோட்டை, காரியாபட்டி முதலான பகுதிகளில் மானாவாரியில் குறைந்த அளவிலும் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

இப்பயிர் விளைச்சலுக்கு 90 நாள்கள் மட்டுமே கால அளவு. மேலும், உழவு, விதை சோளம், உரம், களை எடுத்தல் என ஒரு ஹெக்டேருக்கு அதிகளவு ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்யப்படும். பராமரிப்பு செலவு குறைவு மற்றும் கூடுதல் மகசூல் கிடைப்பதால் இப்பயிரை விவசாயம் செய்வதில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர். இம்மாவட்டத்தில் மக்காச்சோளம் 1.30 லட்சம் டன் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து வேளாண் அலுவலர் ஒருவர் கூறியது: அரசு தானிய வகைகளை அதிகம் உற்பத்தி செய்வதற்காக விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. தானிய வகையான மக்காச்சோளத்தில் கார்போஹைட்ரேட், புரோட்டீன், விட்டமின்-ஏ மற்றும் குழந்தைகளுக்கான சத்து மாவு தயாரிக்கவும் பயன்படுகிறது. அதேபோல், கால்நடை கோழி தீவனம் தயாரிக்கவும் மக்காச்சோளம் அதிகம் பயன்படுகிறது. கடந்த ஆண்டை விட இப்பகுதியில் மக்காச்சோள சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஜயமுருகன் கூறியது: விருதுநகர் மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட மக்காச்சோள பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது பெய்த தொடர் மழை காரணமாக மக்காச்சோள விளைச்சல் நன்கு உள்ளது. வியாபாரிகள், நிறுவனங்கள் நேரடியாக கொள்முதல்

செய்வதால் ஒரு குவிண்டால் ரூ. 1,550க்கு வரை வாங்குகின்றனர். தற்போது ஒரு ஹெக்டேரில் அதிகபட்சமாக 30 குவிண்டால் வரை விளைச்சல் இருக்கும். அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைத்து விவசாயிகளிடம் மக்காச்சோளத்தை கொள்முதல் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்றார் அவர்.

இதில் முதல் கட்டமாக சென்னை, கோவை மாநகரப் பகுதிகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொருவரும் மாடித் தோட்டம் அமைத்து விஷத்தன்மை இல்லாத காய்கறிகளை விளைவித்து பயனடைந்தனர்.

2 மாநகரங்களில் விரிவாக்கம்: நிகழாண்டில் மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகரப் பகுதிகளிலும் விரிவாக்கம் செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்காக ரூ.5 கோடியும் ஒதுக்கீடு செய்து, 1 லட்சம் பேருக்கு மாடித் தோட்டம் அமைப்பதற்கான விதைகள், உரங்கள் ஆகியவை விநியோகிக்க முடிவு செய்து அதற்கான பணிகளில் தோட்டக் கலைத் துறையினர் ஈடுபட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவுத்திடலில் அரங்கு: சென்னை தீவுத்திடலில் சுற்றுலாத் துறை நடத்தும் பொருள்காட்சியில் அரசின் பல்வேறு துறைகள் சார்பில் சாதனை திட்டங்கள், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரங்குகள் உள்ளன.

அதில், தோட்டக்கலைத்துறை சார்பில் உள்ள அரங்கில் குறைந்த விலையில் காய்கறிகள் விதை, இடுபொருள்கள் வழங்கப்படுகிறது.

இதுதொடர்பாக திருவேற்காடைச் சேர்ந்த வசந்தகுமார் கூறுகையில், முற்றிலும் இயற்கை உரங்களைக் கொண்டு உற்பத்தி செய்வதால் 40 நாள்களிலேயே நஞ்சற்ற காய்கறிகள் கிடைக்கும். அதனால், குறைந்த விலை காய்கறி விதைகளுடன் கூடிய பொட்டலத்தைச் வாங்குகிறேன் என்றார்.

இதுகுறித்து தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கூறுகையில், மாடித்தோட்டம் அமைப்பதற்கான 6 வகையான விதைகள், இயற்கை உரங்கள், புற ஊதக் கதிர்களை தாங்கி

செடியை வளர்க்க கூடிய பைகள் உள்ளிட்டவைகளுடன் குறைந்த விலையில் ரூ.500-க்கு வழங்கப்படுகிறது.

ஏற்கெனவே, அண்மையில் சென்னையில் 100 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. அதில், 10 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பார்வையிட்டு வாங்கிச் சென்றனர். இதன் மூலம் காய்கறிகளை நேரடியாக விளைவித்து சத்தான காய்கறிகளை சத்தான காய்கறிகளைச் சாப்பிட்டு உடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்க முடியும்.

பொருள்காட்சியில் மாடித்தோட்டத்தில் இடம் பெறும் காய்கறிச் செடிகள் அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதோடு விளைவிப்பதற்கான வழிகாட்டு கையேடும் வழங்கப்படுகிறது.

பதிவு வசதியும் உண்டு: தீவுத்திடலில் உள்ள விதை விற்பனை மையத்தை ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர் பார்வையிட்டுச் செல்கின்றனர். குறைந்த விலை விதைகளில் சில, கையிருப்பு இல்லாத நிலையில் அவற்றை மீண்டும் வந்து பெற்றுச் செல்லும் வகையில் விதைகளின் பெயர்களைப் பதிவு செய்கிறோம் என்றனர்.

## வாணியாறு அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

பாப்பிரெட்டிப்பட்டி வாணியாறு அணையிலிருந்து பாசனத்துக்காக புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம்,10 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என, மாவட்ட ஆட்சியர் கே. விவேகானந்தன் தெரிவித்தார்.

தமிழக அரசு உத்தரவுப்படி, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வாணியாறு அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீரை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் திறந்து வைத்தார். தொடர்ந்து, அவர், பாசனக் கால்வாயில் மலர்களைத் தூவினார். அப்போது அவர் கூறியது:
பாப்பிரெட்டிப்பட்டி வாணியாறு நீர்த்தேக்கத்தின் பழைய ஆயக்கட்டு பகுதியில் ஒரு நனைப்புக்கு புதன், வியாழன் ஆகிய இரண்டு நாள்கள் தண்ணீர் திறந்து விடப்படும்.

29.1.2016 முதல் புதிய ஆயக்கட்டு பகுதிகளில் 48 நாள்கள் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விடப்படும். புதிய ஆயக்கட்டு பகுதியில் 8,550 ஏக்கர் விளைநிலங்களும், பழைய ஆயக்கட்டு பகுதியில் 1,967 ஏக்கர் விளைநிலங்களும் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்து விடப்படும். தொடர்ந்து, வெங்கடசமுத்திரம், ஆலாபுரம், ஒந்தியாம்பட்டி,தென்கரைக்கோட்டை, பறையப்பட்டி புதூர் ஆகிய ஏரிகளை ஒருமுறை நிரப்ப 17.3.2016 முதல் நீர் இருப்பு, அணைக்கு நீர்வரத்தைப் பொருத்து தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், ஆலாபுரம், ஒந்தியாம்பட்டி, தென்கரைக்கோட்டை, பறையப்பட்டி புதூர், மோளையானூர், கோழிமேக்கனூர், பாப்பிரெட்டிப்பட்டி, அதிகாரப்பட்டி, தாதம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி, தேவராஜபாளையம், மெணசி, பூதநத்தம், ஜம்மணஹள்ளி உள்ளிட்ட 16 கிராமங்கள் பயன்பெறும்.
பாப்பிரெட்டிப்பட்டி பகுதி விவசாயிகள் பொதுப் பணித் துறையினருடன் ஒத்துழைத்து தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நல்ல விளைச்சலைப் பெற வேண்டும் என்றார். இதில், அரூர் கோட்டாட்சியர் ரா.கவிதா, ஒன்றியக் குழுத் தலைவர் பி.கே.முருகன், வட்டாட்சியர் கே.மணி, வட்டார வளர்ச்சி அலுவலர் சி.அன்பழகன், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் கே.சரவணகுமார், உதவிப் பொறியாளர் அ.பு.கிருபா,
அ.தி.மு.க. ஒன்றியச் செயலர் வி.சி.கௌதமன், மாவட்டப் பொருளர் நல்லதம்பி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்திற்கு...பரிந்துரை சேகரிப்பு: சொர்ணவாரி பட்டத்தில் மானியத்திற்கு வாய்ப்பு

வாலாஜாபாத்:தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தேவையான, மானிய திட்டங்களின் பரிந்துரைகளை, வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில், வேளாண் துறை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர். சொர்ணவாரி பட்டத்திற்குள், பரிந்துரைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் துறையில், மத்திய அரசு திட்டங்களில் ஒன்றான, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில், வட்டார வேளாண் விரிவாக்க மையங்களுக்கு, புதிய கட்டடங்கள்; வேளாண் துணை கிடங்குகள்; ஊராட்சிகளில் நெற்களங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

மேலும், நெற்பயிர் இயந்திர நடவு; விதைகள் உற்பத்தி; எண்ணெய் வித்து பயிர்; வேளாண் பொறியியல் இயந்திரம்; வேளாண் மற்றும் தோட்டக்கலை சொட்டு நீர் பாசனம்; விதைகள் உள்ளிட்டவற்றிற்கு மானியம் வழங்கப்படுகிறது.

இயந்திரம்:இந்நிலையில், மத்திய அரசு இந்த மானிய திட்டம், முதல் ஐந்தாண்டுகள் திட்டம், 20-15ம் ஆண்டு இறுதியுடன் முடிந்தது. இதனால், விதை, உரம், வேளாண் பொறியியல் இயந்திரம் ஆகியவற்றிற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள்,

தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. சமீபத்தில் பெய்த வட கிழக்கு பருவ மழையால், ஏரிகள் நிரம்பியும்; ஆழ்துளை கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்தும் உள்ளன.

விவரங்கள்:இதனால், நீரின்றி விவசாயம் செய்யாமல் இருந்த நிலங்களில், விவசாய பணிகள் மீண்டும் துவங்கி உள்ளன. இந்நிலையில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட மானியங்கள் நிறுத்தப்படுவதால், வேளாண் துறை நிர்வாகம் சிக்கலுக்கு ஆளாக நேரிடும் என்பதால், மானிய திட்டத்தை மீண்டும் துவக்க, அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

அதன்படி, மாவட்ட வேளாண் நிர்வாகம், அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களுக்கு நேரடியாக சென்று, மானிய திட்டங்களின் தேவை விவரங்களை சேகரித்து வருகிறது.இதன் மூலம் சொர்ணவாரி பட்டத்திற்கு, மானியம் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வகுக்கப்படும் திட்டம் தான், வேளாண் அபிவிருத்தி திட்டம். திட்டத்தின் முதல் ஐந்து ஆண்டுகள் திட்டம் நிறைவடைந்து உள்ளது.இரண்டாம் ஐந்து ஆண்டுகள் திட்டத்திற்காக, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களின் பரிந்துரைகளை சேகரித்து வருகிறோம். அவற்றை, மத்திய அரசுக்கு அனுப்ப உள்ளோம். சொர்ணவாரி பட்டத்திற்குள் மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் கிடைத்தால், சொர்ணவாரி பட்டத்தில், பல்வேறு திட்டங்களுக்கு மானியங்கள் வழங்கப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 'நார் சத்துக்கு 110 நாள்'

ஆர்.கே.பேட்டை:நெல், கரும்பு பயிரிடுவதுடன், உடலுக்கு வலிமை தரும் கேழ்வரகு உள்ளிட்ட தானிய வகைகளும் பயிரிடுவதில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்.கே.பேட்டை சுற்றுப்பகுதியில், கரும்பு அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தது. தற்போது நீர் வளம் அதிகளவில் உள்ளதால், நெல் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நெல், கரும்பு மட்டும் பயிரிட்டால் போதாது, உடலுக்கு நார் சத்து தரும் கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட தானிய பயிர்களும் பயிரிட வேண்டும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து, விவசாயி ராமகிருஷ்ணன் கூறியதாவது:

ஆர்.கே.பேட்டை அடுத்த, பீமாரெட்டியூர் பகுதியில், தற்போது கேழ்வரகு நடவு செய்யப்பட்டு வருகிறது.

நாற்றங்கால் 20 நாட்களிலும், நடவுக்கு பின் 90 நாட்களிலும், கேழ்வரகு அறுவடை செய்யப்படுகிறது.

ஒரு கிலோ கேழ்வரகு, 25 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. பாத்தி கட்டி நடவு செய்யப்படும் கேழ்வரகு பயிருக்கு, வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி னால் போதும்.இவ்வாறு அவர் கூறினார்.

## தண்டலத்தில் கால்நடை மருந்தகம்

காஞ்சிபுரம்:தண்டலம் ஊராட்சியில், 22 லட்சம் ரூபாயில் புதிய கால்நடை மருந்தகம் அமைய உள்ளது.

தண்டலம் ஊராட்சி யில், நேற்று, காலை 10:30 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி தலைமையில், மனு நீதி நாள் முகாம் நடைபெற்றது.

அப்போது, 17 பேருக்கு வாக்காளர் அடையாள அட்டை; 18 பேருக்கு முதியோர் உதவித்தொகை உத்தரவு; மூன்று பேருக்கு குடும்ப அட்டை;

31 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் போன்றவற்றை ஆட்சியர் கஜலட்சுமி வழங்கினார்.
மேலும், தண்டலம் ஊராட்சியில் 22 லட்சம் ரூபாய் மதிப்பில் கால்நடை மருந்தகம் கட்டப்பட உள்ளது என, ஆட்சியர் கஜலட்சுமி தெரிவித்தார். அப்போது, பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, முகாமில், 50 பேர், மனு அளித்தனர்.

## பொன்னி நெல் விதை தட்டுப்பாடு

திருத்தணி:வேளாண் விற்பனை மையத்தில், சூப்பர் பொன்னி நெல் விதைக்கு, தட்டுப்பாடு நிலவுவதால், விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.
திருத்தணி ஒன்றியத்தில் உள்ள, 27 ஊராட்சிகளில், சமீபத்தில் பெய்த கனமழையால் ஏரி, குளம், குட்டைகள் நிரம்பி வழிகின்றன.
மேலும், விவசாயக் கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதால், பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிரிட்டு வருகின்றனர்.
இந்த நிலையில், திருத்தணி வேளாண் விற்பனை மையத்தில், சூப்பர் பொன்னி நெல் விதைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் நெல் விதை கிடைக்காமல் அவதிப்படுவதுடன், காலத்தில் பயிர் செய்ய வேண்டும் என, தனியார் கிடங்குகளுக்கு சென்று அதிக விலை கொடுத்து, விதை நெல் வாங்கிச் செல்கின்றனர்.
இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'தற்போது சூப்பர் பொன்னி நெல்லுக்கு மட்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒன்றரை மாதத்தில் மட்டும், சூப்பர் பொன்னி விதை நெல், 120 டன் விற்பனை செய்துள்ளோம்' என்றார்.
மேலும், 'அதிகளவில், அதே நெல் விதைகள் கேட்பதால், தட்டுப்பாடு உள்ளது. இருப்பினும், நாங்கள், 50 டன், நெல் தேவை என, மாவட்ட அதிகாரிகளிடம் கேட்டுள்ளோம். ஓரிரு நாளில் வழங்குவதாக உறுதி அளித்து உள்ளனர்' என்றார்.

## கொப்பு வாய்க்காலில் பராமரிப்பு பணி தீவிரம்

கோபி: கோபி கோட்டம், கீழ்பவானி பாசன திட்டத்தில், இரண்டாம் முறை பாசன பகுதிகளில், முறைநீர் பாசன சபைகள் மூலம், யு5 முதல் யு10 வரை, கொப்பு வாய்க்கால் பராமரிப்பு பணிகள் நடந்தது.

யு6 பாசன சபையில் கூகலூர் பிரிவு வாய்க்காலில், நேரடி மதகு எண், 20ல் கடைமடை பகுதிகளுக்கு, சீரான நீர் கிடைக்காததால், மதகு சங்க தலைவர் செங்கோட்டையன் தலைமையில், விவசாயிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டனர். யு8 பாசன சபையில், கவுந்தப்பாடி பிரிவு வாய்க்காலில், வேலம்பாளையம் உபகிளை வாய்க்கால், அவாரங்காட்டூர், கவுந்தப்பாடி, கவுந்தப்பாடி புதூர் பகுதிகளில், செயலாளர் செங்கோட்டையன் தலைமையில், விவசாயிகள் குழு தூர்வாரும் பணிகளை செய்தனர். யு8 பி பாசன சபையில், மாரப்பம்பாளையம் உபகிளை வாய்க்கால் கடைமடை பகுதியில், சேதமடைந்த நீர் பிரிப்புத் தொட்டிகள் சீரமைக்கப்பட்டன. மேலும், கடைமடை பகுதியில், 35 ஏக்கர் அளவில் உள்ள கொப்பு வாய்க்காலில், மூன்று லட்சம் ரூபாய் மதிப்பில், சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு, திறந்தவெளி வாய்க்காலை, குழாய் வாய்க்காலாக மாற்றி உள்ளனர். இப்பணிகளை கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், செயலாளர் வெங்கடாசலபதி ஆகியோர் பார்வையிட்டனர்.

## தேயிலை ஏலத்தில் விலை உயர்வு ஏற்பட்டதால் ஆறுதல்

குன்னூார் : குன்னூாரில் நடந்த நடப்பாண்டுக்கான இரண்டாவது தேயிலை ஏலத்தில், விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.
நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழில் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேயிலை தொழிலில் கடந்த சில ஆண்டுகளாக பின்னடைவு காணப்பட்டது. பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதியடைந்து வந்தனர். சமீபத்தில்

கேரளாவில் நடந்த ஸ்டிரைக், உலகளவில் ஏற்பட்ட கால நிலை மாற்றம் என பல காரணங்களால், தேயிலை உற்பத்தி குறைந்த நிலையில், தென் மாநில தேயிலை துாளுக்கு கிராக்கி ஏற்பட்டது.

வாரந்தோறும் குன்னுார், கோவை, கொச்சி பகுதிகளிலுள்ள ஏல மையங்களில் தேயிலை துாள் ஏலம் நடக்கிறது. இந்நிலையில், குன்னுாரில் நடந்த நடப்பாண்டுக்கான, இரண்டாவது ஏலத்தில் துாளின் சராசரி விலை, கிலோவுக்கு,100 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது கடந்த நான்கு ஆண்டுக்கு பிறகு கிடைத்த அதிகபட்சம் விலையாகும். 2013ல் ஆண்டில் கிலோவுக்கு அதிகபட்சம்,98 ரூபாய் கிடைத்துள்ளது.

இதனால், வரும் நாட்களில் தேயிலை வர்த்தகம் ஏறுமுகத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு கூறுகையில்,“உலக சந்தையில் கிரீன் டீ, ஒயிட் டீ, ஆர்தோடெக்ஸ் டீக்கு வரவேற்பு உள்ளதால், தேயிலை துாள் உற்பத்தியை அதிகரிக்க தொழிற்சாலை நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்றார்.

## ஆலிவ் எண்ணெய்யின் மறுபக்கம்

கடலை எண்ணெய் இதயத்திற்கு நல்லதல்ல என தமிழகத்தில் சூரியகாந்தி எண்ணெய் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது சூரியகாந்தி எண்ணெய்க்கு மாற்றாக ஆலிவ்

நஎண்ணெய்யைப் பரிந்துரை செய்கின்றனர். தமிழக சமையலில் உள்ள வெப்பநிலைக்கு ஆலிவ் எண்ணெய் நல்லதல்ல என்ற கருத்து நிலவுகிறது. ஐரோப்பிய நாடுகளில் ஆலிவ் எண்ணெய் வெப்பப்படுத்தப்படுவது இல்லை. சாலட் போன்றவற்றில் மட்டுமே ஆலிவ் எண்ணெய் சேர்க்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து வெளிநாட்டில் குடியேறிய வெளிநாடு வாழ் இந்தியர்கள் அங்கு சமையலில் ஆலிவ் எண்ணெய்யை பயன்படுத்துவது இல்லை. நல்லெண்ணைய்யைத் தான் பயன்படுத்துகின்றனர்.

## நெல் அறுவடை பணிகள் ஜரூர்

கச்சிராயபாளையம்: கச்சிராயபாளையம் பகுதியில் சம்பா நெல் அறுவடை பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கச்சிராயபாளையம் மற்றும் சுற்றுபுற பகுதிகளில் நெல், கரும்பு, பருத்தி, வாழை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துள் ளனர். கால தாமதமாக பெய்த பருவமழையால், கச்சிராயபாளையம் பகுதியில் சம்பா பருவ சாகுபடியில் பணியும் தாமதமாக துவங்கப்பட்டது. இந்நிலையில் கடந்த செப்.,, அக்., மாதங்களில் கிணற்று பாசன விவசாயிகள் சாகுபடி செய்த, சம்பா நெல் பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் நெல் அறுவடை பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

## கன மழையால் நெல் சாகுபடி பரப்பு உயர்வு! மகசூலை அதிகரிக்க விவசாயிகள் ஆர்வம்.

தியாகதுருகம்: பருவமழை எதிர்பார்த்த அளவை விட கூடுதலாக பெய்து நீர்நிலைகள் நிரம்பியுள்ளதால், கள்ளக்குறிச்சி பகுதியில் நெல் சாகுபடி பரப்பு மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், மகசூலை பெருக்க விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த 4 ஆண்டுகளாக பருவமழை போதிய அளவு பெய்யாததால், நீர் நிலைகள் வறண்டது. கோமுகி அணையை தவிர மணி முக்தா, வீடூர் அணைகள் நிரம்பாததால் ஆயக்கட்டு பாசன நிலங்களில் பயிர் சாகுபடி கேள்விக்குறியானது.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், கிணற்று பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகளும் செய்வதறியாது தவித்தனர். இதனால் மாவட்டத்தில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. நீர் பற்றாக்குறையால் நெல் சாகுபடி செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. குறிப்பாக கள்ளக்குறிச்சி சுற்றுவட்டார பகுதியில், நெல் நடவு செய்யப்படும் பரப்பு அதிரடியாக குறைந்தது. பாசன பற்றாக்குறையால், நன்செய் நிலங்களில் மானாவாரியாக உளுந்து, மக்காச்சோளம், கம்பு சாகுபடி செய்யப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன், நெல் உற்பத்தி அதிகம் இருந்ததால் கள்ளக்குறிச்சி பகுதியில் 100 க்கும் மேற்பட்ட மாடர்ன் ரைஸ் மில்கள் அமைக்கப்பட்டது. பருவமழை பொய்த்தது, விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டதாலும், நெல் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது. ரைஸ் மில் உரிமையாளர்கள் வெளி மாவட்டங்களுக்கு சென்று, நெல் கொள்முதல் செய்தனர்.

கடந்த, 2011 ம் ஆண்டு "தானே' புயல் வீசியதால், கனமழை பெய்து நீர் நிலைகள் நிரம்பியது. அதைத் தொடர்ந்து 4 ஆண்டுகளாக பருவமழை ஏமாற்றியதால், விவசாயிகள் வருவாய் இன்றி தவித்தனர். பலர் விளை நிலங்களை விற்பனை செய்தனர். இந்நிலையில், கடந்த மாதம் பெய்த தொடர் மழையால், மாவட்டத்தில் உள்ள 3 அணைகளும் நிரம்பி, ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தடுப்பணைகள், ஏரி, குளங்கள் முழு கொள்ளவை எட்டியதால், நீர்வளம் பெருகி, நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதனால், நெல் சாகுபடியில், விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். தரிசாக இருந்த நிலங்கள் எல்லாம் தற்போது நெல் நாற்று நடப்பட்டு, பசுமையாக காட்சியளிக்கிறது. முதல் ரகமான பொன்னி நெல் சாகுபடிக்கான பருவம் முடிந்ததால், குறுகிய கால பயிரான ஏ.டி.டி., 45 ரகத்தை அதிக அளவில் நடவு செய்துள்ளனர்.

சில இடங்களில் தற்போதுதான், நெல் நாற்று விட்டுள்ளனர். திரும்பிய பக்கமெல்லாம் நெற்பயிர்கள் பசுமையோடு காட்சியளிப்பது கண் கொள்ளாகாட்சியாக உள்ளது. விவசாயிகள் தற்போது களைபறித்து, பூச்சு மருந்து தெளித்து, ஊட்டச்சத்து உரங்களை தூவி பராமரித்து வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில், நெல் சாகுபடி பரப்பு 3 மடங்காக உயர்ந்துள்ளதால், விவசாயிகளும், வேளாண் தொழிலாளர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அதிகாரிகள் ஆலோசனை அவசியம்**

கடந்த 4 ஆண்டுக்கு பின், நெல் சாகுபடி அதிகரித்துள்ளதால், விவசாயிகளுக்கு தேவையான உரம், பூச்சி மருந்து, விவசாய கருவிகள் தடையின்றி கிடைக்க வேளாண்துறை அதிகாரிகள் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் நெல் வயலுக்கு நேரில் சென்று மகசூல் அதிகரிக்க தேவையான தொழில் நுட்பம் மற்றும் ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

## வேளாண் அறிவியல் மையத்தில் சுற்றுச்சுழல் விழிப்புணர்வு முகாம்

குளித்தலை: கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த புழுதேரி வேளாண் அறிவியல் மையத்தில் நடந்த முகாமில், மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சுழல் அமைச்சகம், திண்டுக்கல் அமைதி அறக்கட்டளை, சிநேகிதி அறக்கட்டளை ஆகியவை சார்பில், தேசிய சுற்றுச்சுழல் விழிப்புணர்வு முகாம் நடந்தது. புழுதோரி பஞ்சாயத்து தலைவர் அண்ணாதுரை தலைமை வகித்தார். பாலைவனமதாதல், நிலத்தின் வளம் குறைதல், வறட்சியை எதிர்த்து போராடுதல் பற்றிய தலைப்பின் கீழ் எஸ்.கே.வி.கே., மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் மையத் தலைவர் டாக்டர் திரவியம், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் கவியரசு, வேளாண் விரிவாக்க அலுவலர் தமிழ்செல்வி ஆகியோர் கொண்ட குழுவினர் பேசினர். இரண்டாம் நாள் பில்லூரில் நடந்த முகாமிற்கு, பில்லூர் பஞ்சாயத்து தலைவர் ராகவன் தலைமை வகித்தார். எஸ்.கே.வி.கே., மையத்தின் கால்நடை மருத்துவர் டாக்டர் அருண்குமார், தலைமையாசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி ராமமூர்த்தி, துவக்கப்பள்ளி சாராள் நவமணி, இயற்கை மகளிர் உழவர் மன்ற கூட்டமைப்பினர், சுற்றுசுழல் பாதுகாப்பு பற்றி பேசினர்.

## உயிரியல் மாற்றம் குறித்து சர்வதேச கருத்தரங்கு

உத்தமபாளையம்:உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியில் உயிரியல் மாற்றங்கள் குறித்த ஒரு நாள் சர்வதேச கருத்தரங்கு நடந்தது.

கல்லூரி ஆட்சிமன்றக்குழுத் தலைவர் சேக்முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரி செயலர் தர்வேஷ்முகைதீன் முன்னிலை வகித்தார். விலங்கியல் துறை உதவி பேராசிரியர் முகமதுமீரான் வரவேற்றார்.

சென்னை லயோலா கல்லூரி பூச்சியியல் துறை இயக்குநர் இஞ்ஞாசிமுத்து, ""சீனாவின் சாதாரண பெண் மலேரியாவை கட்டுப்படுத்தக் கூடிய "ஆர்டிமிசினின்' என்னும் மருந்தை கண்டுபிடித்தார். அதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. எனவே ஆராய்ச்சித்துறையில் மாணவர்கள், இளைஞர்கள் ஈடுபட வேண்டும்' என்றார். முதல்வர் முகமது மீரான் துவக்கி வைத்தார்.

மலேசிய மருத்துவபல்கலை இணை பேராசிரியர் கோபாலகிருஷ்ணன், திருவள்ளுவர் பல்கலைக்கழக இணை பேராசிரியர் அறிவொளி, சென்னை கிறிஸ்தவ கல்லூரி இணை பேராசிரியர் ரவீண், தேனி மருத்துவ இணை இயக்குநர் சையதுசுல்தான் இப்ராகீம் பேசினர்.

**மக்காச்சோளம் பயிரிட மண்ணுக்கு மருந்து அடிக்கும் விவசாயிகள்**

வீரபாண்டி: சேலம் வீரபாண்டி ஒன்றியத்துக்குட்பட்ட, சென்னகிரி ஊராட்சி இருசணம்பட்டி பகுதியில் பயிர் விளைவதற்கு முன்னரே, விவசாயிகள் புற்கள் வளராமல் தடுக்க மண்ணுக்கு மருந்து அடிக்கின்றனர்.

களைகள் மற்றும் புற்கள் வளராமல் தடுக்க, விதைக்கும் முன்பே மண்ணுக்கு, 'களைக்கொல்லி' பூச்சி மருந்தை மோட்டார் தெளிப்பான் மூலம் அடிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நெல், கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட அனைத்து பயிர்களுக்கும் நோய்கள் தாக்காமல் பாதுகாக்க பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பது வாடிக்கை. நல்ல மகசூல் கிடைக்க உர மருந்தும் தெளிப்பர். தற்போது விவசாய கூலிகள் கிடைக்காததால், களைகள் பயிர்களில் வளர்வதை தடுக்கும் வகையில், விதை விதைக்கும் முன்பே மண்ணுக்கு பூச்சிக்கொல்லி மருந்தை அடித்து புற்கள் வளராமல் தடுத்து விடுகின்றனர். குறிப்பாக, மக்காச்சோளம் பயிரில் களைகள் வளர்ந்தால் அவற்றை எடுப்பது கடினம், பயிர் வளர்ந்த பின் பூச்சிக்கொல்லி மருந்தை அடித்தால் பயிர்கள் கருகி விடும் அபாயமும் உள்ளது. எனவே, மக்காச்சோளம் பயிரிடும் பெரும்பாலான

விவசாயிகள் மண்ணுக்கு மருந்து அடிக்கும் புதிய உத்தியை கையாண்டு வருகின்றனர்.

## அறுவடைக்கு நெற்பயிர் தயார்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே சாகுபடி செய்யப் பட்டுள்ள நெற்பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 1,28, 196 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. காருகுடி, வன்னிவயல், காரேந்தல், சித்தூர், பெருங்களூர், தேர் தாங்கல், ஆர்.காவனூர் உள்ளிட்ட பகுதிகளில் கிட்டதட்ட 2 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் நன்கு விளைந்து கதிர்கள் முற்றிய நிலையில் அறுவடைக்கு தயாராக உள்ளன.

இன்றைய வேளாண் செய்திகள்

## வெளிநாட்டு விஞ்ஞானிகள் பங்கேற்பு

## பச்சையப்பன் கல்லூரியில் மூலிகை தாவரம் குறித்த சர்வதேச கருத்தரங்கம்




சென்னை: பச்சையப்பன் கல்லூரியில் மூலிகை தாவரங்கள் குறித்த 3 நாள் சர்வதேச கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதுகுறித்து அக்கல்லாரியின் பேராசிரியர் சேகர் நேற்று அளிக்க பேட்டி: சென்னை பச்சையப்பன் கல்லூரியின் தவாரவியல் துறையின் பவளவிழா கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு 'உலகளவில் ஆய்வில் உள்ள மருத்துவ தாவரங்கள், மூலிகைகள் குறித்த சர்வதேச கருத்தரங்கம்' நாளை தொடங்கி 31ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில், அமெரிக்கா, துருக்கி, ஜப்பான், சீனா, உஸ்பெஸ்கிஸ்தான், கொரியா உள்பட பல்வேறு நாடுகள் மற்றும் நமது

நாட்டை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூலிகை ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர்கருத்தரங்கில், மூலிகை குறித்த ஆராய்ச்சி கட்டுரைகள், அரிய வகை மூலிகை தாவரங்கள், அழியும் நிலையில் உள்ள தாவரங்கள் குறித்து பல்வேறு நாட்டு மூலிகை ஆராய்ச்சி விஞ்ஞானிகள் அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

அழிந்து வரும் மூலிகைளை சாகுபடி செய்தல், உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு மூலிகை ஏற்றுமதி, மூலிகை உற்பத்தி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற கலந்துரையாடல்கள் நடைபெறுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விஷத்தை முறிக்கும் சுவர்ணப்பட்டி பூ




சுவர்ணப்பட்டி மரம் சாலை ஓரங்களில் வளரக் கூடியது. அழகுக்காக வைக்க கூடிய இதில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. இது, சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. பூக்கள், இலைகள், வேர் ஆகியவை மருந்தாக பயன்படுகிறது. கொத்துக்கொத்தான பூக்களை கொண்ட மரம்.சுவர்ணப்பட்டி மரத்தின் வேரை பயன்படுத்தி பால்வினை நோய்க்கான மருந்து தயாரிக்கலாம். கால் ஸ்பூன் வேர் பொடியுடன்,

அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்க்கவும். இதில் ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிக்கட்டி குடித்தால் வயிற்று பூச்சிகள் வெளியேறும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

பால்வினை நோயினால் ஏற்படும் கொப்பளங்கள், புண்களுக்கு மருந்தாகிறது. தோல்நோய்களை குணப்படுத்துகிறது. புற்றுநோயை போக்கும் தன்மை கொண்ட சுவர்ணப்பட்டி, தங்க அரளி என்றும் அழைக்கப்படுகிறது. விஷத்தன்மையை முறிக்கும் மருந்தாக விளங்கும் இது மஞ்சள் நிற பூக்களை அதிகளவில் உடையது. இந்த மரம் கோயில்களில் வளர்க்கப்படுகிறது. சுவர்ணப்பட்டி மரத்தின் வேர் பொடியை பயன்படுத்தி விஷக்கடிக்கான மருந்து தயாரிக்கலாம்.

வேர் பொடியுடன் சிறிது எலுமிச்சை சாறு விட்டு நன்றாக கலக்கவும். இதை பாம்பு, தேள், எலி கடித்த இடத்தில் போடும்போது விஷத்தன்மை முறியும். புதர்போல் வளரக்கூடிய சுவர்ணப்பட்டியானது வெறிநாய் கடி விஷத்தைகூட முறிக்கும் தன்மை கொண்டது. மேல்பூச்சாக மட்டுமின்றி இதை சிறிது சாப்பிட பயன்தருவதாக அமைகிறது. சுவர்ணப்பட்டி மலர்களை பயன்படுத்தி வயிற்று வலிக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு வேளைக்கு 5 பூக்கள் எடுக்கவும்.

இதனுடன் அரை ஸ்பூன் சீரகம், அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிக்கட்டி குடித்தால் வயிற்று வலி, கடுப்பு போக்கும். வயிற்று புண்களை ஆற்றக்கூடியது. புற்றுநோய் புண்களை ஆற்றும். கல்லீரலை பலப்படுத்தும். வயிற்று பூச்சிகளை அழிக்கும். சுவர்ணப்பட்டி பூக்கள், இலைகளை பயன்படுத்தி படை, தேமலுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

தேங்காய் எண்ணெயுடன், பூ பசை, இலை பசையை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்ச வேண்டும். இதை வடிகட்டி எடுத்து

பயன்படுத்தினால் தோல்நோய்களான படை, தேமல், சொரி போன்றவை குணமாகும். வண்டு கடிக்கு மருந்தாகிறது. சுவர்ணப்பட்டியின் இலையில் மருத்துவ குணங்கள் அதிகம் இருப்பதால், சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. ரத்தத்தில் சர்க்கரை அளவை குறைக்கும். இது வீரியம் உடையது என்பதால் அளவாக பயன்படுத்த வேண்டும்.

## பனிக்கால பிரச்னைகளை தீர்க்கும் முருங்கை, கறிவேப்பிலை ரசம்




முருங்கை ஈர்க்கை பயன்படுத்தி சளி, இருமலை போக்கும் ரசம் தயாரிக்கலாம். முருங்கை ஈர்க்கு என்பது முருங்கை கீரைகளை எடுத்துவிட்டால் கிடைக்கும் குச்சிகள். இதை சிறு துண்டுகளாக வெட்டி எடுக்கவும். இதனுடன் 4 பல் பூண்டு சேர்த்து தட்டி எடுத்து வைத்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் நெய் விடவும். நெய் உருகியதும் தாளிக்க கடுகு சேர்க்கவும். கடுகு பொறிந்ததும் இஞ்சி துண்டுகள் சேர்க்கவும். பூண்டு, முருங்கை ஈர்க்கு சேர்த்த கலவை போடவும். பச்சை வாடை போகும்வரை வதக்கவும். சிறிது மஞ்சள்பொடி சேர்க்கலாம். இதனுடன் மிளகு, சீரகம், பூண்டு சேர்த்த கலவையை சேர்த்து வதக்கவும். பின்னர், உப்பு சேர்த்து தேவையான அளவு நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். முருங்கை ஈர்க்கு ரசத்தை சாப்பிட்டு வந்தால், மார்கழி, தையில் வரும் சளி, இருமல், காய்ச்சல் தடுக்கப்படும். செரிமான

சக்தியை தூண்டுகிறது. முருங்கை பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. உணவிலேயே முக்கியத்துவம் பெற்ற முருங்கையில் இரும்பு, கால்சியம் சத்து உள்ளது. கறிவேப்பிலை ஈர்க்கை பயன்படுத்தி ரசம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கறிவேப்பிலை ஈர்க்கு, தக்காளி சாறு, கொத்துமல்லி இலைகள், மிளகு, சீரகம், பூண்டு, பெருங்காயம், காய்ந்த மிளகாய், மஞ்சள் பொடி, கடுகு, நல்லெண்ணெய், புளிகரைசல், உப்பு. பாத்திரத்தில் நல்லெண்ணெய் காய்ந்தவுடன், பெருங்காயப் பொடி, கடுகு, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை மற்றும் மிளகு, சீரகம், பூண்டு சேர்ந்த கலவையை சேர்க்கவும். ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி சேர்க்கவும்.

கறிவேப்பிலை ஈர்க்குகளை சிறிய துண்டுகளாக நசுக்கி எடுத்து சேர்க்கவும். இது வதங்கியவுடன் தக்காளி சாறு, புளி கரைசல், தேவையான அளவு உப்பு, நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதில் கொத்துமல்லி இலைகளை சேர்க்கவும். இந்த ரசத்தை குடித்துவர வாந்தி, குமட்டல், தலைசுற்றல் சரியாகும். சளி, இருமல் இல்லாமல் போகிறது. செரிமானத்தை தூண்டக்கூடியதாகிறது. உடலுக்கு உஷ்ணத்தை கொடுக்கிறது.

அன்னாசி பழத்தை பயன்படுத்தி நோய் எதிர்ப்புசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தை சுத்தப்படுத்தும் ரசம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: அன்னாசி பழம், தக்காளி, மஞ்சள் பொடி, கடுகு, நல்லெண்ணெய், பெருங்காயப்பொடி, பூண்டு, சிவப்பு மிளகாய், கறிவேப்பிலை, கொத்துமல்லி, மிளகு, சீரகம், உப்பு. நல்லெண்ணெய், கடுகு, பெருங்காயப்பொடி, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை மற்றும் நறுக்கிய அன்னாசி பழம், தக்காளி துண்டுகள் சேர்த்து வதக்கி மஞ்சள் பொடி சேர்க்கவும்.

இதனுடன் மிளகு, சீரகம், பூண்டு கலவையை சேர்க்கவும். பின்னர், அன்னாசி பழச்சாறு, தக்காளி சாறு, தேவையான உப்பு, கொத்துமல்லி இலை சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இந்த அன்னாசி ரசத்தை

குடித்துவர வயிற்று பூச்சிகள் வெளியேறும். சளித்தொல்லை இருக்காது. செரிமானத்தை சீர்செய்யும். வைட்டமின் சி சத்து அதிகம் உள்ள அன்னாச்சி பழம் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது.

விவசாயிகள் வறட்சியை தவிர்க்க ஏரி நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் கிராம சபை கூட்டத்தில் தீர்மானம்

காஞ்சிபுரம், : விவசாயத்திற்கு ஏரி நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று கிராம சபை கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.காஞ்சிபுரம் அடுத்த கீழ்அம்பி ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்திற்கு தலைவர் மணி தலைமை வகித்தார். கூட்டத்தில், ஏரி நீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்தி, அறுவடை நேரத்தில் வறட்சி ஏற்படுவதை தவிர்க்க வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள், கிராம மக்கள் கலந்துகொண்டனர்.

* காலூர் ஊராட்சியில் நடந்த கூட்டத்திற்கு தலைவர் அசோகன் தலைமை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் ஜீவானந்தம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், வீடுகளில் தனிநபர் கழிப்பறை வசதியை ஏற்படுத்தி, ஊராட்சியை முழு சுகாதாரமாக மாற்ற ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* திருப்புக்குழி ஊராட்சியில் நடந்த கூட்டத்திற்கு தலைவர் வெங்கடேசன் தலைமை வகித்தார். கூட்டத்தில், ஊராட்சி விரிவாக்க பகுதி மக்கள், தங்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க வேண்டும், தெரு விளக்குகளை சீரமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

* கீழ்கதிர்பூர் ஊராட்சியில் நடந்த கூட்டத்துக்கு தலைவர் சந்திரன் தலைமை வகித்தார். கூட்டத்தில், முழு சுகாதார திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கைவிடுத்தனர்.

**சம்பா, தாளடி பயிர்களில் புகையான் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறை**

நாகை, : சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் அழகர், திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது நிலவி வரும் வானிலை சூழ்நிலையால் நடப்பு சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்களில் புகையான் தாக்குதல் தென்படுகிறது. புகையான் தாக்குதலை தடுக்க நடவிற்கு முன் தண்ணீர் தேங்கி நிற்காமல் வயலை சீராக சமப்படுத்த வேண்டும். புகையான் பூச்சி தாக்குதலை எதிர்பார்க்கும் இடங்களில் ஒவ்வொரு 8 அடிக்கும் ஒரு அடி இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். நெற்பயிரை கிழக்கு மேற்கு திசையில் நட வேண்டும். ஏன்னெனில் சூரிய ஒளி பயிரின் அடிப்பகுதி வரை ஊடுருவி செல்வதால் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறையும். வரப்புகளில் உளுந்து, தட்டைப்பயறு போன்ற பயறு வகை பயிர்களை சாகுபடி செய்வதால் நன்மை செய்யும் பூச்சிகளான பொறி வண்டுகள், கண்ணாடி இறக்கை பூச்சிகள், சிற்படு ஈக்கள், சிலந்திகள் பெருகும். இவை நெற்பயிரில் தீமை செய்யும் பூச்சிகளை பிடித்து தின்று விடும். நெருக்கமாக நடுவதுதான், எல்லா விதமான பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலுக்கு காரணம். நெருக்கமாக நடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவு நுண்ணுட்டங்களையும், பேரூட்டங்களையும் சரியான நேரத்தில் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் இயற்கையாகவே பயிர்களுக்கு நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கும். தேவைக்கு அதிகமாக இடப்படும் உரங்கள், பூச்சி, நோய்களின் பெருக்கத்திற்கு காரணமாகி விடும். மேலும் உரங்களை சரியான தருணத்தில் பிரித்து இட வேண்டும். பொதுவாக அதிகளவு சாம்பல் சத்து இடுவதால் பயிர்களில் நோய்களுக்கு எதிர்ப்புத்திறனை கொடுக்கும். கண்டிப்பாக தழைச்சத்தை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக இட கூடாது. புகையானுக்கு எதிர்ப்பு சக்தி, மறு பெருக்கத்தை உண்டாக்கும் செயற்கை வகை பைரித்திராய்டு பூச்சி கொல்லி மருந்துகளான லாம்டா சைகளோத்திரின், சைப்பர் மெத்தரின், பென்வலரேட், மீத்தைல் பாரத்தியான், குய்னால்பாஸ் போன்ற

மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். பூச்சி கொல்லி மருந்துகளை பயிரின் அடிப்பகுதியில் படும்படி தெளிக்க வேண்டும். புகையான் தாக்குதல் தென்பட்டவுடன் தண்ணீரை வடிகட்டி பட்டம் பிரித்து விட்டு காய விட்டு காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும். புகையான் தாக்குதல் இருக்கும்போது, தழைசத்தை இடகூடாது. தாக்குதல் ஆரம்ப நிலையில் இருக்கும்போது, லெக்காணி என்ற பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 20 கிலோ மண்ணில் கலந்து தூவ வேண்டும். இந்த பூஞ்சாணம் புகையான் நோயை ஏற்படுத்தி கொல்லும் தன்மை கொண்டது. தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டும் போது, வேப்ப விதைச்சாறு 5 சதவீதம் அல்லது அசாடிராக்டின் 500 மி.லி. அல்லது தயாமீத்தாக்சாம் 40 கிராம், பியூப்ரோபேசின் 320 மிலி அல்லது இமிடாக்குளோபிரிட் 50 மி.லி. இவற்றில் ஏதாவது ஒன்றை விசைத்தெளிப்பானாக இருந்தால் 100 லிட்டர், கைத் தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தண்டின் அடிப்பகுதி நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## ஒருங்கிணைந்த மேலாண்மை பயிற்சி

பட்டுக்கோட்டை, : திருவோணம் வட்டாரம் பெரியகோட்டைக்காடு கிராமத்தில் வேளாண்மைத்துறை மூலம் அட்மா விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் 40 விவசாயிகளுக்கு நிலக்கடலை மற்றும் எள் பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தலைமை வகித்தார். வெங்கரை ஊராட்சி தலை வர் கோபால் முன்னிலை வகித்தார். வெங்கரை ஒன்றியக்குழு உறுப்பினர் பழனியப்பன், திப்பன்விடுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் சேகர் சிறப்புரையாற்றினர். பயிற்சியில் கார்த்திகை- மார்கழி பட்டத்துக்கு தேவையான நிலக்கடலை பயிரில் ரகத்தேர்வு, பூஞ்சாணம் விதை நேர்த்தி, உயிர் உரங்கள் நேர்த்தி, பயிர் எண்ணிக்கை பராமரிக்கல், ரசாயன உரம், நீர் நீர்வாகம், பூச்சி, நோய் மேலாண்மை தொழில்நுட்பம் குறித்து பட்டுக்கோட்டை வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் பாரதி பேசினார். நிலக்கடலை பயிருக்கு உர நிர்வாகம் மற்றும் நுண்ணூட்டச்சத்து, கலவை உரம்

பயன்படுத்துதல், ஜிப்சம் இடுவதால் ஏற்படும் நன்மை, இயற்கை உரம் மற்றும் உயிர் உரங்கள் இடுவதின் முக்கியத்துவம், எள் பயிரில் அடியுரமாக மாங்கனீசு சல்பேட் இடுவதால் ஏற்படும் நன்மை, அடியுரமாக ஜிப்சம் இடுதல், வளர்ச்சி பருவத்தில் அதிக சேதம் விளைவிக்கும் இலை- காய் பிணைக்கும் புழுவை கட்டுப்படுத்தும் முறை, இலை சிறுக்கல் நோயால் பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி எடுப்பதால் ஏற்படும் நன்மை குறித்து திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் பேசினார். களை நிர்வாகம் மற்றும் திரவ உயிர் உரங்கள் உபயோகம் பற்றி திருவோணம் வேளாண்மை அலுவலர் முருகேசன் எடுத்துரைத்தனர். டிரைக்கோடெர்மா விரிடி, ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்தல் செயல்விளக்கத்தை பகுதி வேளாண்மை உதவி அலுவலர் ரஞ்சித் செய்து காண்பித்தார்.

## மானிய விலையில் பசுந்தாள் உரம்

பேராவூரணி, : பேராவூரணி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பசுந்தாள் உரப்பயிர், நுண்ணூட்ட உரங்கள் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து பேராவூரணி வேளாண்மை உதவி அலுவலர் ஈஸ்வர் வெளியிட்டுள்ள அறிக்கை: பேராவூரணி வட்டாரத்தில் நெல்லுக்கு அடுத்தப்படியாக தென்னை பெருமளவு சாகுபடி செய்யப்படுகிறது. நிலத்தின் வளத்தை மேம்படுத்த அதிகளவு இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும். இதை கருத்தில் கொண்டு பேராவூரணி வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் பசுந்தாள் உரப்பயிர்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேராவூரணி வட்டார விவசாயிகள் தாங்கள் விரும்பும் உரக்கடைகளில் தேவையான பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பு, கொளுஞ்சியை வாங்கி கொண்டு ரசீதுடன் வேளாண் உதவி அலுவலர்கள் மூலம் வேளாண்மை உதவி இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் ஒரு எக்ேடருக்கு 50 கிலோ அனுமதிக்கப்படும். 50 கிலோவுக்கான விலையில் 50 சதவீத தொகை அல்லது அதிகபட்சமாக எக்ேடருக்கு ரூ.2000 இவற்றில் எது குறைவோ அது வழங்கப்படும். இத்தொகை

சம்மந்தப்பட்ட விவசாயி வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். விண்ணப்பத்துடன் போட்டோ, சிட்டா அடங்கல், ரொக்க ரசீது வழங்க வேண்டும். மேலும் கரும்பில் இரும்பு சல்பேட் இடும் விவசாயிக்கு எக்டேருக்கு ரூ.500 மானியம் வழங்கப்படுகிறது. இதற்கும் தனியார் உரக்கடைகளில் வாங்கி இருந்தாலும் ரசீதுடன் விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அதிகளவில் பசுந்தாள் உரப்பயிர்களை தென்னந்தோப்பு மற்றும் அறுவடையான நெல் வயல்களில் விதைத்து நிலத்தை வளப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகையான் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறை

நாகை, : சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் அழகர், திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது நிலவி வரும் வானிலை சூழ்நிலையால் நடப்பு சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்களில் புகையான் தாக்குதல் தென்படுகிறது. புகையான் தாக்குதலை தடுக்க நடவிற்கு முன் தண்ணீர் தேங்கி நிற்காமல் வயலை சீராக சமப்படுத்த வேண்டும். புகையான் பூச்சி தாக்குதலை எதிர்பார்க்கும் இடங்களில் ஒவ்வொரு 8 அடிக்கும் ஒரு அடி இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். நெற்பயிரை கிழக்கு மேற்கு திசையில் நட வேண்டும். ஏன்னெனில் சூரிய ஒளி பயிரின் அடிப்பகுதி வரை ஊடுருவி செல்வதால் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறையும். வரப்புகளில் உளுந்து, தட்டைப்பயறு போன்ற பயறு வகை பயிர்களை சாகுபடி செய்வதால் நன்மை செய்யும் பூச்சிகளான பொறி வண்டுகள், கண்ணாடி இறக்கை பூச்சிகள், சிற்படு ஈக்கள், சிலந்திகள் பெருகும். இவை நெற்பயிரில் தீமை செய்யும் பூச்சிகளை பிடித்து தின்று விடும். நெருக்கமாக நடுவதுதான், எல்லா விதமான பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலுக்கு காரணம். நெருக்கமாக நடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவு நுண்ணுட்டங்களையும், பேரூட்டங்களையும் சரியான நேரத்தில் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் இயற்கையாகவே பயிர்களுக்கு நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கும். தேவைக்கு அதிகமாக இடப்படும் உரங்கள், பூச்சி, நோய்களின் பெருக்கத்திற்கு காரணமாகி விடும். மேலும் உரங்களை சரியான தருணத்தில் பிரித்து இட வேண்டும். பொதுவாக அதிகளவு சாம்பல் சத்து இடுவதால் பயிர்களில் நோய்களுக்கு எதிர்ப்புத்திறனை கொடுக்கும். கண்டிப்பாக தழைச்சத்தை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக இட கூடாது. புகையானுக்கு எதிர்ப்பு சக்தி, மறு பெருக்கத்தை உண்டாக்கும் செயற்கை வகை பைரித்திராய்டு பூச்சி கொல்லி மருந்துகளான லாம்டா சைகளோத்திரின், சைப்பர் மெத்தரின், பென்வலரேட், மீத்தைல் பாரத்தியான், குய்னால்பாஸ் போன்ற மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். பூச்சி கொல்லி மருந்துகளை பயிரின் அடிப்பகுதியில் படும்படி தெளிக்க வேண்டும். புகையான் தாக்குதல் தென்பட்டவுடன் தண்ணீரை வடிகட்டி பட்டம் பிரித்து விட்டு காய விட்டு காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும். புகையான் தாக்குதல் இருக்கும்போது, தழைசத்தை இடகூடாது. தாக்குதல் ஆரம்ப நிலையில் இருக்கும்போது, லெக்காணி என்ற பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 20 கிலோ மண்ணில் கலந்து தூவ வேண்டும். இந்த பூஞ்சாணம் புகையான் நோயை ஏற்படுத்தி கொல்லும் தன்மை கொண்டது. தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டும் போது, வேப்ப விதைச்சாறு 5 சதவீதம் அல்லது அசாடிராக்டின் 500 மி.லி. அல்லது தயாமீத்தாக்சாம் 40 கிராம், பியூப்ரோபேசின் 320 மிலி அல்லது இமிடாக்குளோபிரிட் 50 மி.லி. இவற்றில் ஏதாவது ஒன்றை விசைத்தெளிப்பானாக இருந்தால் 100 லிட்டர், கைத் தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தண்டின் அடிப்பகுதி நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## நெற்பயிரில் பூச்சிகளை கட்டுப்படுத்த பயிற்சி

சிவகங்கை, : தேவகோட்டை அருகே சித்தனூர், கண்ணங்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் டீலக்ஸ் பொன்னி பயிரிடப்பட்டது. இதனால் எதிர்ப்புத்திறன் குறைந்து அதிக அளவில் நோய் தாக்குதல்

ஏற்பட்டது. குறிப்பாக நெற்பயிரில் குலைநோய், பாக்டீரியா இலைக்கருகல்நோய் மற்றும் இலைசுருட்டுப்புழுவின் தாக்குதல்கள் அதிகமாக காணப்பட்டது. இதையடுத்து வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பயிற்சியளிக்கப்பட்டது. பேராசிரியர்கள் சதீஸ்குமார், அழகப்பன் விவசாயிகளுக்கு பயிற்சி முறை குறித்து விளக்கமளித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விளைச்சல்–வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு சந்தையில் காய்கறிகள் விலை மேலும் குறைந்தது ஒரு கிலோ தக்காளி ரூ.10–க்கு விற்பனை



சென்னை,
விளைச்சல் மற்றும் வரத்து அதிகரிப்பால் கோயம்பேடு சந்தையில் காய்கறிகள் விலை மேலும் குறைந்து உள்ளது. ஒரு கிலோ தக்காளி ரூ.10–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வரத்து–விளைச்சல் அதிகரிப்பு

கடந்தாண்டு இறுதியில் பெய்த கனமழை காரணமாக காய்கறிகள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் காய்கறிகள் விலை 'கிடுகிடு'வென உயர்ந்தது. இந்தநிலையில் இயல்புநிலை திரும்பியதை தொடர்ந்து காய்கறிகள் விலை குறையத்தொடங்கியது. கடந்த வாரம் வெண்டை, கத்தரி, முருங்கை உள்ளிட்ட காய்கறிகள் விலை அதிரடியாக குறைந்தது.

தற்போது விளைச்சல் அதிகரித்து வருவதன் எதிரொலியாக ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் இருந்தும், காஞ்சீபுரம், திருவள்ளூர், ஒட்டன்சத்திரம், பழனி உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கோயம்பேடு சந்தையில் காய்கறிகளின் விலை மேலும் குறைந்துள்ளது.

இதுகுறித்து சென்னை கோயம்பேடு காய்கறி சங்கத்தின் பொதுச்செயலாளர் அப்துல் காதர் கூறியதாவது:–

காய்கறிகள் விலை குறைவு

அண்டை மாநிலங்களில் விளைச்சல் நன்றாக இருப்பதை தொடர்ந்து கூடுதல் லாரிகளில் காய்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. இதனால் காய்கறிகள் விலை வெகுவாக குறைந்தது. தற்போது மேலும் வரத்து அதிகரித்து இருப்பதால், காய்கறிகளின் விலை மேலும் குறைந்துள்ளது. முகூர்த்த நாட்கள் உள்ள நிலைமையிலும் மிகுதியான வரத்து காரணமாக காய்கறிகள் விலை குறைந்துள்ளது.

குறிப்பாக கடந்த சில தினங்களுக்கு முன்பு ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளி, தற்போது அதிரடியாக குறைந்து ரூ.10–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ முருங்கைக்காய், தற்போது ரூ.80–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.55 வரை விற்பனையான ஒரு கிலோ

கேரட், தற்போது ரூ.35 வரை விற்பனையாகிறது. ரூ.40 வரை விற்பனையான ஒரு கிலோ கத்தரிக்காய், தற்போது ரூ.20–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுதவிர பீட்ரூட், அவரைக்காய், பாகற்காய், புடலங்காய், சாம்பார் வெங்காயம் ஆகிய காய்கறிகளின் விலை கிலோவுக்கு ரூ.10 வரை சரிந்துள்ளது.

விலை நிலவரம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

பல்லாரி– ரூ.15 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு– ரூ.18 முதல் ரூ.20 வரை, கேரட்– ரூ.30 முதல் ரூ.35 வரை, பீன்ஸ்– ரூ.35, நூக்கல்– ரூ.25 வரை, சவ்சவ்– ரூ.12 முதல் ரூ.15 வரை, பீட்ரூட்– ரூ.30, முட்டைக்கோஸ்– ரூ.15 முதல் ரூ.20 வரை, மிளகாய்– ரூ.35, இஞ்சி– ரூ.45, சேப்பங்கிழங்கு– ரூ.28 முதல் ரூ.30, கத்தரிக்காய்– ரூ.20, வெண்டைக்காய்– ரூ.30, அவரைக்காய்– ரூ.18 முதல் ரூ.20 வரை, கோவைக்காய்– ரூ.20, பாகற்காய்– ரூ.35 முதல் ரூ.45 வரை, முருங்கைக்காய்– ரூ.80, முள்ளங்கி– ரூ.15, வெள்ளரிக்காய்– ரூ.18, புடலங்காய்– ரூ.40 வரை, பூசணிக்காய்– ரூ.15, தக்காளி– ரூ.10, காலிபிளவர்– ரூ.20 முதல் ரூ.25 வரை, பீர்க்கங்காய்– ரூ.20, பச்சை மொச்சை– ரூ.30, சுரைக்காய்– ரூ.20, சாம்பார் வெங்காயம்– ரூ.30 முதல் ரூ.40 வரை, கீரை (கட்டு)– ரூ.10, தேங்காய் (ஒன்று)– ரூ.15 முதல் ரூ.22 வரை, வாழைக்காய் (ஒன்று)– ரூ.3 முதல் ரூ.6 வரை, வாழைப்பூ (ஒன்று)– ரூ.10, வாழைத்தண்டு (பீஸ்)– ரூ.10.

இவ்வாறு அவர் கூறினார்.

பழங்கள் விலை அதிகரிப்பு

காய்கறிகளின் விலை குறைந்திருந்தாலும், வரத்து குறைவு காரணமாக பழங்களின் விலை அதிகரித்து உள்ளன. இதுகுறித்து கோயம்பேடு சந்தை அங்காடி விற்பனைக்குழு உறுப்பினர் கே.ஜெயராமன் கூறியதாவது:–

வரத்து குறைந்ததின் எதிரொலியாக பழங்களின் விலை உயர்ந்துள்ளது. குறிப்பாக கடந்த வாரத்தை காட்டிலும் கொய்யாப்பழம் விலை கிலோவுக்கு ரூ.15 அதிகரித்துள்ளது. ஆப்பிள், சப்போட்டா, ஆரஞ்சு போன்ற பழங்களில் விலையும் கிலோவுக்கு ரூ.10 வரை உயர்ந்துள்ளது.

சாத்துக்குடி, ஆரஞ்சு, சப்போட்டா, தர்பீஸ், திராட்சை போன்றவற்றின் விலை இன்னும் உயரவே வாய்ப்பு அதிகம். கோயம்பேடு மார்க்கெட்டில் பழங்களின் விலை நிலவரம் (கிலோவில்) வருமாறு:

வாஷிங்டன் ஆப்பிள்– ரூ.180, சீனா ஆப்பிள்– ரூ.160, இந்திய ஆப்பிள்– ரூ.130, மாதுளை (காபூல்)– ரூ.130, சாதாரண மாதுளை– ரூ.85 வரை, சாத்துக்குடி– ரூ.60 வரை, ஆரஞ்சு– ரூ.35 முதல் ரூ.45 வரை, கொய்யாப்பழம்– ரூ.40, திராட்சை (கருப்பு)– ரூ.50, கருப்பு சீட்லெஸ் திராட்சை– ரூ.100, பச்சை சீட்லெஸ் திராட்சை (சோலாபூர்)– ரூ.80, தர்பீஸ்– ரூ.15 முதல் ரூ.20 வரை, பப்பாளி– ரூ.22, கிர்ணிப்பழம்– ரூ.25 வரை, சப்போட்டா– ரூ.40 வரை, அன்னாசிபழம் – ரூ.30, இலந்தைப்பழம்– ரூ.15, வாழை (தார்)– ரூ.200 முதல் ரூ.250 வரை.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் கடந்த ஆண்டு ரூ.3 கோடிக்கு மஞ்சள் தூள் விற்பனை



ஈரோடு

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம் கடந்த ஆண்டு ரூ.3 கோடிக்கு மஞ்சள்தூள் விற்பனை செய்யப்பட்டு இருப்பதாக நிர்வாக இயக்குனர் கூறிஉள்ளார்.

<u>மஞ்சள் தூள்</u>

ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி ரோடு பகுதியில் ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. இங்கு தினமும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

இங்கு மஞ்சள் விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒரு திட்டமாக மஞ்சளை மதிப்பு கூட்டும் பொருளாக மாற்றும் வகையில் மஞ்சள் தூள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்திலேயே சிறிய அளவிலான தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இதுகுறித்து ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நிர்வாக இயக்குனர் பி.கந்தராஜா கூறியதாவது:–

<u>விவசாயிகள் நலன்</u>

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் 25 ஆயிரத்து 439 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் பயிரிடும் மஞ்சளை விற்பனைக்காக இந்த விற்பனை கூடத்துக்கு கொண்டு வருகிறார்கள். இங்குள்ள கிடங்குகளில் மஞ்சள் இருப்பு வைக்கப்பட்டு தினசரி ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக மஞ்சள் விலை விவசாயிகளுக்கு லாபகரமானதாக இல்லை என்று கருதுகிறார்கள்.

எனவே அவர்கள் கவலைக்கு ஆளாகிறார்கள். இந்த நிலையை போக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மஞ்சள் மதிப்பு கூட்டும் ஒரு திட்டத்தை கூட்டுறவு சங்கம் அமல் படுத்தியது. அதன் விளைவாக கூட்டுறவு சங்கம் மூலம் மஞ்சள் தூள் தயாரிக்கும் ஆலை அமைக்கப்பட்டது. கடந்த ஆண்டு மஞ்சள் தூள் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டு புதுப்பொலிவுடன் பணிகள் தொடங்கின.

<u>விற்பனை</u>

மஞ்சள் தூள் தயாரிக்கும் பணிக்காக தினக்கூலி அடிப்படையில் 18 பேர் சேர்க்கப்பட்டனர். நடப்பு நிதி ஆண்டில் இதுவரை ரூ.2 கோடியே 90 லட்சத்துக்கு மஞ்சள் தூள் விற்பனை செய்து உள்ளோம்.

மஞ்சள் தூளுக்காக எங்கள் கூட்டுறவு சங்க விவசாயிகளிடம் இருந்து மஞ்சள் விலைக்கு வாங்கப்பட்டது. விலை குறைவாக வியாபாரிகள் கேட்கும் காலக்கட்டத்தில், விவசாயிகளின் நலன் கருதி அவர்களுக்கு உதவும் வகையில் குறைந்த பட்ச ஒரு விலையை நாங்கள் நிர்ணயம்

செய்து மஞ்சளை விலைக்கு வாங்கினோம். இது விலை உயர்வுக்கும் காரணமாக அமைந்தது. சில நாட்களில் மஞ்சள் தூள் உற்பத்திக்காக சுமார் 10 டன் அளவுக்கு நாங்கள் விவசாயிகளிடம் இருந்து மஞ்சள் வாங்கி உள்ளோம். எனவே விவசாயிகளும் பெரும் அளவில் கூட்டுறவு சங்கத்துக்கு மஞ்சள் கொண்டு வருகிறார்கள்.

<u>முதல்–அமைச்சர் தொடங்கி வைக்கிறார்</u>

எங்கள் மஞ்சள் தூள் உற்பத்தி ஆலையில் எந்த கலப்படமும் இல்லாமல் மஞ்சள் தூள் உற்பத்தி செய்யப்பட்டு கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு மங்களம் மஞ்சள் தூள் என்ற பெயரில் விற்பனை செய்து வருகிறோம்.

விரைவில் குங்குமம், மல்லித்தூள், மிளகாய்த்தூள், சாம்பார் தூள், ரசத்தூள் ஆகியவற்றின் உற்பத்தியை தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைக்க உள்ளார்.

இவ்வாறு நிர்வாக இயக்குனர் பி.கந்தராஜா கூறினார்.

## நாகர்கோவிலில் காய்கறிகள் விலை வீழ்ச்சி தக்காளி கிலோ ரூ.20–க்கு விற்பனை



நாகர்கோவிலில் காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்தது. இதைத்தொடர்ந்து நாட்டுத்தக்காளி கிலோ ரூ.20 க்கு விற்பனை செய்யப்பட்டது.

விலைவீழ்ச்சி

கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு பெய்த கனமழை காரணமாக காய்கறிகள் விலை மிகவும் அதிகமாக உயர்ந்தது. அதைத்தொடர்ந்து பொங்கல் பண்டிகை வந்தது. இதனால் விலை மேலும் அதிகரித்தது. இந்த நிலையில் கடந்த சில தினங்களாக காய்கறிகள் படிப்படியாக விலை வீழ்ச்சிஅடைந்தது.

மழையால் காய்கறி வரத்தில் தொய்வு ஏற்பட்டிருந்த நிலை மாறி தற்போது வரத்து அதிகரித்து இருப்பதாக வியாபாரிகள் கூறினர்.

நாட்டுதக்காளிரூ.20

கடந்த பொங்கல் பண்டிகையை கணக்கிடும்போது நேற்றைய விலை பாதியாக வீழ்ச்சி அடைந்தது. நாகர்கோவில் காய்கறி கடைகளில் நேற்றைய விலை விவரம் கிலோவுக்கு வருமாறு:–

நாட்டுத்தக்காளி–ரூ.20, பெங்களூர் தக்காளி–ரூ.28, கத்தரிக்காய் (வரி)–ரூ.20, நாட்டு கத்தரிக்காய்–ரூ.50, கேரட்–ரூ.50, பீன்ஸ்–ரூ.56, கேப்சிகம்–ரூ.50, வழுதலங்காய்–ரூ.40, கோழிஅவரை–ரூ.40, கோவங்காய்–ரூ.46, முள்ளங்கி–ரூ.36, மிளகாய்–ரூ.50, சின்ன வெங்காயம்–ரூ.40, பல்லாரி–ரூ.24 மற்றும் ரூ.34, உருளைக்கிழங்கு–ரூ.40 மற்றும் ரூ.20, வெள்ளரிக்காய்–ரூ.30.

பொங்கல் பண்டிகையையொட்டி நாட்டுத்தக்காளி கிலோ ரூ.40–க்கும், கேரட் ரூ.100–க்கும் விற்றது. பிற காய்கறிகளும் அதைப்போலவே விலை

உயர்ந்து இருந்தது. ஆனால் நேற்று பாதியாக விலை குறைந்ததை அறிந்து பொதுமக்கள் காய்கறிகளை நாட தொடங்கியுள்ளனர்.

## 20 காசுகளுக்கு மேல் முட்டையை குறைத்து கொடுக்க கூடாது ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு




தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு நிர்ணயிக்கும் விலையில் இருந்து 20 காசுகளுக்கு மேல் குறைத்து கொடுக்க கூடாது என நாமக்கல்லில் நடந்த பண்ணையாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முட்டை விலை உயர்வு நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 406 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு முட்டை கொள்முதல் விலையை 9 காசுகள் உயர்த்த முடிவு செய்தது. இதனால் முட்டை விலை 415 காசுகளாக உயர்ந்து உள்ளது. வடமாநிலங்களில் கடும் குளிர் நிலவுவதாலும், தமிழகத்தில் தைப்பூசம் முடிவடைந்து விட்டதாலும்

முட்டையின் தேவை அதிகரித்து உள்ளது. இதுவே விலை உயர்வுக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இருப்பினும் ஐதராபாத் மண்டலத்தில் முட்டையின் கொள்முதல் விலை 400 காசுகள் என நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதால், அங்குள்ள முட்டைகள் தமிழக வியாபார பகுதியான கேரளா மற்றும் சென்னைக்கு வந்து விடுகின்றன.

'மைனஸ்'அதிகரிப்பு

இதனால் கோழிப்பண்ணையாளர்கள் தங்கள் பண்ணைகளில் இருப்பு உள்ள முட்டைகளை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து குறைத்து விற்பனை செய்ய தொடங்கினர். ஒவ்வொரு பண்ணையாளரும், ஒவ்வொரு விலைக்கு முட்டையை விற்பனை செய்வதால், முட்டை விலையில் 'மைனஸ்' அதிகரித்து கொண்டே சென்றது. இதனால் தொழிலில் குழப்பமான நிலை கடந்த வாரம்நிலவியது.

இந்த நிலையில் கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் முட்டை வியாபாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் முதலைப்பட்டியில் நடந்தது. இதில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு அறிவிக்கும் விலையில் இருந்து 20 காசுகள் மட்டுமே குறைத்து கொடுக்க வேண்டும். அதற்கு மேல் விலையை குறைக்க கூடாது என முடிவு செய்யப்பட்டது.

20காசுகள்

இது குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பிகூறியதாவது:-

முட்டை விற்பனையில் நாளுக்கு நாள் 'மைனஸ்' அதிகரித்த வண்ணம் இருந்தது. இதனை ஒழுங்குபடுத்தும் வகையில் பண்ணையாளர்கள் மற்றும் முட்டை வியாபாரிகள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. இதில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும்

விலையில் இருந்து தற்போது 20 காசுகளுக்கு மேல் குறைத்து யாரும் கொடுக்க கூடாது என முடிவு செய்து உள்ளோம். இனி வரும் காலங்களில் படிப்படியாக குறைத்து ‘மைனஸ்’ விலையை 15 காசுகள் என நிர்ணயம் செய்ய முடிவு செய்து உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**சம்பா அறுவடை பணிகள் தீவிரம் 25 ஆயிரம் எக்டேரில் பணிகள் முடிவடைந்தன**




தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை 25 ஆயிரம் எக்டேரில் அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். வழக்கமாக குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து ஜூன்

மாதம் 12-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்படும்.

ஆனால் கடந்த ஆண்டு தாமதமாக ஆகஸ்டு மாதம் 9-ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கல்லணையை வந்தடைந்ததும், கல்லணையில் இருந்து பாசனத்துக்காக 13-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் 40 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை. 34 ஆயிரத்து 47 எக்டேரில் சாகுபடி நடைபெற்றது.

சம்பாசாகுபடி

தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டதால் சம்பா சாகுபடியின் பரப்பளவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 32 ஆயிரம் எக்டேரில் சம்பா, தாளடி சாகுபடி நடைபெறும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் சம்பா, மற்றும் தாளடி சாகுபடி 1 லட்சத்து 28 ஆயிரத்து 236 எக்டேரில் நடவு செய்யப்பட்டது. இதில் நீண்டகால நெல் ரகமான சாவித்திரி, மத்திய கால நெல் ரகமான பி.பி.டி.5204, ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, ஆடுதுறை 49, கோ 50 ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டன.

நவம்பர் மாதம் இறுதி வரை சம்பா, தாளடி நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது தஞ்சை மாவட்டத்தில் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

எந்திரம் மூலம் அறுவடைப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அரிதாக ஒருசில இடங்களில் தொழிலாளர்கள் அறுவடை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒரத்தநாட்டில் முடிந்தது

தஞ்சை மாவட்டத்தில் உள்ள தஞ்சை, பட்டுக்கோட்டை, பேராவூரணி, கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம், திருவையாறு, பூதலூர்

ஆகிய ஒன்றியங்களில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஒரத்தநாடு ஒன்றியத்தில் சம்பா அறுவடை பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

தற்போது 25 ஆயிரம் எக்டேரில் அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பகுதிகளில் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## 927 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு அமைச்சர் காமராஜ் தகவல்



காவிரி டெல்டா மாவட்டங்களில் இதுவரை 927 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் காமராஜ்தெரிவித்துள்ளார்.

அமைச்சர்ஆய்வு

நீடாமங்கலம் ஒன்றியம் ராயபுரத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை உணவு மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் காமராஜ் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். நெல்லின் தரம், கொள்முதல் செய்யும் பணிகள் மற்றும் விவசாயிகளுக்கு உரிய வகையில் தொகை பட்டுவாடா செய்யப்படுகிறதா என்பது குறித்தும் அவர் நேரில்

ஆய்வு செய்து கேட்டறிந்தார். அதுசமயம் விவசாயிகளிடமும் கொள்முதல் பணிகளில் ஏதேனும் குறைகள் உள்ளனவா என்பதை அவர் கேட்டார். விவசாயிகள் நெல் கொள்முதல் குறித்து திருப்தி தெரிவித்தனர்.இதை தொடர்ந்து அமைச்சர் காமராஜ், நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- நெல் கொள்முதல் நிலையம்

காவிரி டெல்டா மாவட்டங்களில் இதுவரை 927 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் கேட்கும் இடங்களில் எல்லாம் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். நடப்பு சம்பா அறுவடை பருவத்தில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது முதல் இதுவரை ஒரு லட்சத்து 6 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் குவிண்டாலுக்கு சன்னரக நெல்லுக்கு ரூ.70-ம், சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.50-ம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.7 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4½ ஆண்டுகளில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல்லுக்கு ஊக்கத்தொகையாக மட்டும் அரசு ரூ.370 கோடியை வழங்கி உள்ளது. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு விவசாயிகளுக்கு உடனடியாக முழுத்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. டெல்டா அல்லாத மாவட்டங்களில் இதுவரை 42 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. 20 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, மன்னார்குடி உதவி கலெக்டர் டாக்டர்செல்வசுரபி, நீடாமங்கலம் ஒன்றியக்குழு தலைவர் ராஜேந்திரன், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் சங்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பொன்.வாசுகிராம், கூட்டுறவு சங்க தலைவர் ஆதி.ஜனகர், ஷாஜஹான், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் செந்தமிழ்செல்வன், ஒன்றிய ஆணையர் உஷாராணி, கூடுதல் ஆணையர் பாலசுப்பிரமணியன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

**காட்பாடியில் பசுமை பண்ணை நுகர்வோர் அங்காடியில் கலெக்டர் ஆய்வு**



காட்பாடி,

காட்பாடி கூட்டுறவு நகரமைப்பு பண்டக சாலையின் மூலம் நடத்தப்படும் அம்மா பசுமை பண்ணை நுகர்வோர் காய்கறி அங்காடியை கலெக்டர் நந்தகோபால் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் காய்கறிகளையும் அவர் வாங்கினார். மேலும் அங்கிருந்த பொதுமக்களிடம் அங்காடி குறித்து கேட்டறிந்தார்.

அப்போது பொதுமக்கள் இந்த கூட்டுறவு பண்டக சாலையின் மூலம் வழங்கப்படும் அனைத்து காய்கறிகளும் தரமானதாகவும், விலை மலிவாகவும் உள்ளது. இதனால் எங்களுக்கு இத்திட்டம் பயனுள்ளதாகவும், உதவிகரமாகவும் உள்ளதாக தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருகுணஅய்யப்பதுரை, வேலூர் கூட்டுறவு சங்கங்களின் சரக துணைப்பதிவாளர் திருவள்ளுவர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் விஜயகுமார், துணைப்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் கன்னியப்பன், கூட்டுறவு சார்பதிவாளர் கந்தன், கூட்டுறவு ஒன்றியத்தின் பிரசார அலுவலர் அசோகன் மற்றும் பண்டக சாலையின் பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.